DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -6

| | | |
|---|---|---|
| Name | : திரு. செல்வம் | Caste: |
| Father's Name: | திரு. கந்தசாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 6th day of June - 2023.

**A1 and A3 to A6 present.**

**06.06.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் வட்டம் புரால்நத்தம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2014 ஆம் ஆண்டு நான் வீரபாண்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 15.11.2014 அன்று நானும் என்னுடைய உதவியாளர் கொப்பத்தான் என்பவரும் காலை 9.00 மணிக்கு எனது அலுவலகத்தில் இருந்த போது சேலம் டவுன் தேவேந்திரபுரத்தை சேர்ந்த அருண் (எ) அருண் குமார் தானாகவே எனது அலுவலகத்திற்கு வந்தார்.

கடந்த 01.09.2014 அன்று அரியானுாரை சேர்ந்த விஜயன் என்பவரை தனது நண்பர்கள் மேகநாதன், சந்தோஷ்குமார், கிருபாகரன் மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோர்களுடன் சேர்ந்து விஜயன் காட்டிற்கு அருகில் உள்ள தென்னந்தோப்பில் வைத்து அவரை கொலை செய்ததாக என்னிடம் சொல்லி அவரை போலிசில் ஒப்படைத்துவிடுமாறு கேட்டுக்கொண்டார். நான் அவரிடம் நடந்த சம்பவத்தை

விவரமாக சொல்லும்படி கேட்டேன்.

அவர் என்னிடம் தான் சேலம் டவுன் தேவேந்திரபுரம் போஸ்ட்ஆபிஸ் பின்புறம் தனது மனைவி நந்தினி, 2 வயது மகன் அகிலன், தாயார் மாதவி ஆகியோர்களுடன் வசித்து வருவதாகவும், தானும் தனது அண்ணன் செந்தில்குமார் என்பவரும் சேலம் 5 ரோட்டில் உள்ள பிளக்ஸ்போர்ட் தயார் செய்யும் கடையில் வேலை செய்வதாகவும், கிருபாகரன், மேகநாதன், சந்தோஷ்குமார் ஆகியோர்கள் தனது நண்பர்கள் என்றும், தாங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து மது அருந்துவோம் என்றும், அதுபோன்று சுமார் 3 மாதங்களுக்கு முன்பாக ஒருநாள் தாங்கள் நால்வரும் மது அருந்தி ஜாலியாக இருந்தபோது, கிருபாகரன் என்பவர் அரியானூரில் ஒரு வேலையை செய்து முடித்தால் ரூ.50,000/– கிடைக்கும் என்று சொன்னதாகவும், தங்களுக்கு பணம் தேவைப்பட்டதால் தாங்களும் அதற்கு ஒப்புக்கொண்டதாகவும், கிருபாகரன் தங்கள் 3 பேரையும் அரியானூருக்கு அழைத்து சென்று ஐயங்கார் பேக்கரில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தபோது சுந்தரமூர்த்தி என்பவர் அங்கு வந்ததாகவும், கிருபாகரன் சுந்தரமூர்த்தியை தங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்றும், அப்போது சுந்தரமுர்த்தி அவரது பங்காளியும் பக்கத்து காட்டுக்காரனுமான விஜயன் தனக்கு பலவிதங்களில் இடைஞ்சல் செய்வதாகவும், அவரால் தனது நிம்மதியே போய்விட்டது என்றும், அவனை தீர்த்துகட்டினால் தான் தனக்கு நிம்மதி என்று சொன்னதாகவும், அதன்பின்னர் சுந்தரமூர்த்தி தங்கள் நால்வரையும் விஜயன் காட்டிற்கு அழைத்து சென்று ரோட்டிலிருந்து விஜயனை தங்களுக்கு அடையாளம் காட்டியதாகவும், அதன்பின்னர் தாங்கள் நால்வரும் திரும்பி விட்டதாகவும், அதன்பிறகு 2, 3 முறை தாங்கள் சென்று விஜயனது நடமாட்டத்தை கண்காணித்து விஜயன் அடிக்கடி அரியானூர் வந்து செல்வதை உறுதி செய்து கொண்டதாகவும், கடந்த 01.09.2014 அன்று மாலை 6.00 மணிக்கு தாங்கள் நால்வரும் டுவீலர்களில் அரியானூர் சென்று குமார் ஹோட்டலில் நிறுத்தி பேசிக்கொண்டிருந்ததாகவும், சிறிது நேரத்தில் அங்கு சுந்தரமூர்த்தி வந்ததாகவும், தாங்கள் அனைவரும் குமார் ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டு விஜயன் நடமாட்டத்தை பார்ப்பதற்காக விஜயன் காட்டிற்கு அருகே உள்ள

ரோட்டு ஓரமாக காத்துக்கொண்டிருந்ததாகவும், மணி இரவு 8.00 இருந்தபோது விஜயன் அவரது மொப்பட்டில் அரியானூரை நோக்கி வந்ததாகவும், விஜயன் திரும்பி வரும்வரை தாங்கள் அங்கு காத்துக்கொண்டிருந்ததாகவும், இரவு 9.00 மணி சுமாருக்கு விஜயன் திரும்பி வந்தபோது அருண்குமார் மற்றும் சந்தோஷ்குமார் ஆகிய இருவரும் டுவீலரில் சென்று விஜயனை குறுக்காட்டி நிறுத்தியதாகவும், தங்களுக்கு பின்னாலேயே வந்த சுந்தரமூர்த்தி, கிருபாகரன், மேகநாதன் ஆகியோர் ஐந்துபேரும் சேர்ந்து விஜயனை பக்கத்தில் உள்ள தென்னந்தோப்பிற்கு இழுத்து சென்றதாகவும், சுந்தரமூர்த்தி அவர் வைத்திருந்த கத்தியை எடுத்து விஜயனை நோக்கி உன்னால் தான் எனது நிம்மதியே போய்விட்டது என்று சொல்லி விஜயனின் வயிற்றில் கத்தியால் 2 முறை குத்தியதாகவும், தாங்கள் நான்குபேரும் சேர்ந்து விஜயனை அழுத்தி பிடித்துக்கொண்டதாகவும், கிருபாகரன் விஜயனது கழுத்தை அறுத்துவிட்டததாகவும், விஜயனின் உயிர் போகும் வரை அங்கேயே இருந்து பார்த்து விட்டு சுந்தரமூர்த்தி அவரது தோட்டத்திற்கு போய்விட்டதாகவும், தாங்கள் இரண்டு டுவீலர்களில் திரும்ப வந்துவிட்டதாகவும், 2 தினங்கள் கழித்து கிருபாகரன் தனக்கு ரூ.10,000/- கொடுத்ததகாவும், மீதி தொகையை பின்னால் தருவதாக சொன்னார் என்றும் ஆனால் கொடுக்கவில்லை என்றும், கடந்த 11.11.2014 அன்று கிருபாகரன் ஓமலூர் நீதிமன்றத்தில் சரணடையபோவதாக சந்தோஷ்குமார் தன்னிடம் சொன்னதாகவும், தானும், சந்தோஷ்குமாரும் ஓமலூர் நீதிமன்றத்திற்கு சென்று கிருபாகரனை பார்த்ததாகவும், சுந்தரமூர்த்தி நீதிமன்றத்தில் சரணடைய போவதால் தானும் நீதிமன்றத்தில் சரணடைய இருப்பதாகவும், நீங்கள் அனைவரும் போலிசில் மாட்டிக்கொள்ளாமல் ஜாக்கிரதையாக இருக்கும்படி கிருபாகரன் தங்களிடம் சொன்னதாகவும், வழக்கறிஞருக்கு கட்டணம் செலுத்துவதற்கு தனக்கு வசதி இல்லாத காரணத்தினால் தான் என்னிடம் சரணடைவதாகவும், தன்னை போலிசில் ஒப்படைத்துவிடும்படியும் அருண்குமார் என்னிடம் சொன்னார்.

அருண்குமார் சொன்ன வாக்குமூலத்தை நான் அப்படியே கைப்பட எழுதினேன். அதனை அருண்குமாருக்கு படித்து காண்பித்தேன். அந்த வாக்குமூலத்தில்

அருண்குமார் கையொப்பம் செய்தார். அதில் நானும், எனது உதவியாளர் கொப்பத்தானும் கையொப்பம் செய்தோம். என்னால் பதிவு செய்யப்பட்ட அந்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான் அது அ.சா.ஆ.5.

பின்னர் அந்த வாக்குமூலத்துடன் நான் அருண்குமாரையும் அழைத்துக்கொண்டு எனது உதவியாளர் கொப்பத்தானுடன் ஆட்டையாம்பட்டி காவல்நிலையம் சென்று அங்கிருந்த ஆய்வாளரிடம் அருண்குமாரையும், அவர் கொடுத்த வாக்குமூலத்தையும் ஒப்படைத்தேன். அப்போது நான் ஒரு மனு எழுதிக்கொடுத்து ஒப்படைத்தேன். அந்த மனு என்னிடம் காட்டப்படுவது தான். அந்த மனு அ.சா.ஆ.6. சாட்சி 5 ஆம் எதிரி அருண்குமார் என்பரை சரியாக அடையாளம் காட்டுகிறார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

நான் சொன்னதை பதிவு செய்துகொண்டு ஆய்வாளர் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்.

பின்னர் 25.11.2014 அன்று ஆட்டையாம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் சம்பவ இடத்தை தான் பார்வையிடபோவதாகவும், அந்த இடத்திற்கு நானும், எனது உதவியாளரும் வந்து சாட்சி சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நானும் எனது உதவிளார் கொப்பத்தானும் அந்த இடத்திற்கு சென்றோம். அந்த இடம் பேக்காட்டு வளவு பழனிச்சாமி என்பவருக்கு சொந்தமாக தென்னந்தோப்பு ஆகும். அப்போது அந்த இடத்தில் ஆய்வாளர் மற்றும் போலிசார் இருந்தார்கள். கிருபாகரன் என்பவரும் இருந்தார். சம்பவ இடத்தை கிருபாகரன் என்பவர் அடையாளம் காண்பித்தார்.

பின்னர் கிருபாகரன் என்பவர் ரோட்டு ஓரத்தில் இருக்ககூடிய ஒடை அருகில் உள்ள புதரில் இருந்து கத்தி ஒன்றை எடுத்து கொடுத்தார். ஆய்வாளர் அந்த கத்தியை ஒரு மகஜரில் கைப்பற்றினார். அப்போது மதியம்.2.30 மணி இருக்கும். அந்த மகஜரில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7. அதில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். அந்த கத்தி தற்போது

என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது தான். அது அ.சா.பொ.4. ( எதிரி கிருபாகரன் என்பவர் இறந்துவிட்டதால் அவரை பொறுத்து இவ்வழக்கில் சாட்சியம் பதிவு செய்யப்படக்கூடாது என்று அறிவார்ந்த 3 முதல் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபிக்கப்பட்டது )

அதன்பின்னர் ஆய்வாளர் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்தார்.

பின்னர் 28.11.2014 அன்று காலை 9.00 மணிக்கு ஆட்டையாம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட போவதாகவும், அதற்கு நான் சாட்சியாக வரவேண்டும் என்றும் தகவல் கொடுத்தார். அன்று காலை 10.00 மணிக்கு நான் சம்பவ இடம் சென்றேன். நான் அங்கு சென்றபோது ஆட்டையாம்பட்டி கிராமநிர்வாக அலுவலர் கண்ணன், ஆய்வாளர் மற்றும் போலிசார் இருந்தார்கள். சுந்தரமூர்த்தி என்பவரும் இருந்தார். சாட்சி 1ஆம் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்.

சுந்தமூர்த்தி அவரது வீட்டிற்கு அழைத்து சென்று அவரது வீட்டு எரவானத்தில் இருந்து ஒரு கத்தி, ரத்தக்கறை படிந்த லைட் பச்சை நிற சட்டை ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அதனை ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினர். அப்போது காலை சுமார் 10.00 மணி இருக்கும். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், ஆட்டையாம்பட்டி VAO கண்ணன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.8. அந்த மகஜரில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன்.

அவ்வாறு கைப்பற்றப்பட்ட கத்தி மற்றும் சட்டை ஆகியவை என்னிடம் காட்டப்படுவது தான் அவை முறையே அ.சா.பொ.5 மற்றும் 6. சாட்சி சட்டையின் நிறம் வெளிரியிருக்கிறது என்று சொல்லிவிட்டு சட்டையின் காலரில் உள்ள N nice என்ற ஸ்டிக்கர் சரியாக இருப்பதாக சொல்லி அடையாளம் காட்டுகிறார். பின்னர் எங்களை அவரது வீட்டின் அருகே உள்ள வாகனங்கள் நிறுத்தக்கூடிய ஷெட்டிற்கு அழைத்து சென்றார்.

அங்கிருந்து அவர் TN –30– AR 7725 என்ற பதிவெண் கொண்ட பச்சைநிற TVS XL வாகனத்தை எடுத்துக்கொடுத்தார். அதனையும் ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அப்போது காலை 11.30 மணி இருக்கும். அந்த மகஜரிலும் நானும் கண்ணனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.9. அந்த வாகனம் அ.சா.பொ.7.( வாகனம் காவல்நிலைய பாதுகாப்பிலிருந்து இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டது ) அந்த வாகனம் சம்மந்தப்பட்ட புகைப்படங்கள் ( 4 எண்ணிக்கை ) அ.சா.பொ.8 வரிசை.

அதன்பின்னர் ஆய்வாளர் சுந்தரமூர்த்தியை விசாரித்தார் அன்று பிற்பகல் 2 முதல் 2.30 மணிக்குள்ளாக சுந்தரமூர்த்தி அவரது வீட்டின் உள்ளே அழைத்து சென்று கருப்பு நிற சம்சங் செல்போன் ஒன்றை ஆஜர்படுத்தினார். மேலும் கருப்பு, சிவப்பு நிற செல்போன் ஒன்றையும் ஆஜர் படுத்தினார். அந்த இரண்டு செல்போன்களையும் ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த மகஜரிலும் நானும் கண்ணனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10.

கைப்பற்றப்பட்ட சாம்சங் செல்போன் அ.சா.பொ.9. கருப்பு சிவப்பு நிற செல்போன் அ.சா.பொ.10. ( MTS செல்போன் என்று மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது ) கருப்பு மற்றும் சிவப்பு நிற செல்போனில் இருந்து சிம்கார்டு ஒன்றையும் ஆய்வாளர் கைப்பபற்றினார். ( அந்த செல்போனின் உள்ளே சிம்கார்டு உள்ளது ) அங்கிருந்து எங்களை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். ஆய்வாளர் எங்களை விசாரித்தார்.

அதிலிருந்து சிறிது நாட்கள் கழித்து ஆய்வாளர் என்னை போனில் தொடர்பு கொண்டு சம்பவம் நடைபெற்ற பழனிச்சாமி என்பவரது தோட்டத்தின் சர்வே எண் என்னவென்று கேட்டார். நான் அதனை தெரியப்படுத்தினேன். என்னிடம் காட்டப்படும் விண்ணப்பம் ஒன்றை ஆய்வாளர் எனக்கு கொடுத்தார். அந்த விண்ணப்பம் அ.சா.ஆ.11. அந்த விண்ணப்பம் தொடர்பாக என்னால் கொடுக்கப்பட்ட சான்று அ.சா.ஆ.12. அந்த விண்ணப்பத்தில் இறந்துபோன விஜயன் மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோர்களின் நிலங்களை நான் ஆய்வு செய்து, விசாரித்து, பதிவேடுகளை பார்வையிட்டு மேற்படி நிலங்களை பற்றிய விவரம் குறித்து சான்று வழங்குமாறு

கோரப்பட்டது. அது சம்மந்தமாக நான் சான்று வழங்கினேன். அந்த சான்று மேற்கண்ட இரண்டு நபர்களும் அருகருகே அமைந்த விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் என்று சான்றளித்தேன். அதன்பின்னிட்டு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

3 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கு சம்பவ சமயத்தில் நான் சேலம் கிச்சிப்பாளையத்தில் குடியிருந்தேன். வீரபாண்டி கிராம நிர்வாக அலுவலகம் வீரபாண்டி ஒன்றிய அலுவலகத்திலிருந்து சுமார் 1 கி.மீ உள்ளே தள்ளி அமைந்திருக்கிறது. அந்த அலுவலகத்தின் அருகே பால்வாடி பள்ளி இருக்கிறது என்றால் சரிதான். அதற்கு அருகே குடியிருப்பு வீடுகளும் இருக்கிறது என்றால் அலுவலகத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் வீடுகள் இருக்கிறது. அலுவலகத்தின் அருகே கோவில் உள்ளது.

மேற்படி கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கும் இடையே 3 கி.மீ தொலைவு இருக்கும். 2014 ஆம் ஆண்டு 9 வது மாதத்தில் நான் வீரபாண்டி கிராமநிர்வாக அலுவலராக பெறுப்பேற்று கொண்டேன். நாள் நினைவில்லை. எதிரி அருண்குமார் வீரபாண்டி கிராமநிர்வாக அலுவலரின் வரையரைக்குள் குடியிருக்கவில்லை.

என்னிடம் அருண்குமார் சரணடைந்ததாக சொல்லும் தினத்திற்கு முன்பாக நான் அவரை பார்த்தது கிடையாது. நான் எனது உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பவேண்டும் என்றால் அதனை எழுதி கீழே கையொப்பம் செய்து, அதில் அலுவலக முத்திரை பதித்து அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். 15.11.2014 அன்று காலை 8.45 மணியிலிருந்து 9.00 மணிக்குள்ளாக நான் அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். அருண்குமார் என்னிடம் சரணடைந்தபோது பொதுமக்கள் 7, 8 பேர் எனது அலுவலகத்திற்கு வந்திருந்தார்கள் என்றால் அந்த சமயத்தில் யாரும் வரவில்லை. எதிரி என்னிடம் வாக்குமூலம் கொடுத்த போதும் பொதுமக்கள் யாரும் வரவில்லை. பொதுவாக காலை 10.00 மணிக்கு மேல் தான் தன்னை பார்ப்பதற்கு பொதுமக்கள் வருவார்கள் என்றும், அன்றைய தினம் தான் வேறு வேலை சம்மந்தமாக அலுவலகத்திற்கு சீக்கிரமாக வந்துவிட்டதாகவும் சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

நான் அன்றைய தினம் காலை 10.00 மணி முதல் பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் இல்லை. நான் கடந்த 10 ஆண்டுகளாக கிராமநிர்வாக அலுவலராக பணிசெய்து வருகிறேன். கொலை வழக்குகள் சம்மந்தமாக நீதிமன்றங்களில் சாட்சி சொன்ன அனுபவம் எனக்கு உண்டு. பொதுவாக என்னிடம் யாராவது வாக்குமூலம் கொடுத்ததால் அதனை 1+2 ஆக தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

சாட்சி மாற்றி அதுபோன்று நடைமுறை எதுவும் இல்லை என்று சொல்லுகிறார். அதுபோன்று நடைமுறை உண்டு என்றாலும், அதனை வழக்கிற்காக வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. அருண்குமார் என்னிடம் சரணடைவதற்கு முன்பாக இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனது உதவியாளர் சொல்லி தெரிந்து கொண்டேன். ஏனென்றால் வழக்கு சம்பவம் நடைபெற்றதற்கு பிறகு தான் அந்த கிராம VAO ஆக நான் பொறுப்பேற்று கொண்டேன்.

இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியும் என்பதால் தான் அருண்குமார் என்னிடம் வாக்குமூலம் கொடுத்த போது விளக்கமாக சொல்லுங்கள் என்று நான் கேட்டேன் என்றால் சரிதான். அருண்குமார் என்னிடம் வந்தபோது காலை 9.00 மணி இருக்கும். அன்று தான் அவரை முதல்முறையாக பார்த்தேன் என்றால் சரிதான். அருண்குமார் என்னிடம் தான் ஒரு கொலை செய்துவிட்டதாகவும் அது சம்மந்தமாக என்னிடம் சரணடைவதாகவும், தன்னை காவல்நிலையத்தில் ஒப்படைத்துவிடும்படியும் மட்டும் தான் கேட்டுக்கொண்டார் என்றால் சரியல்ல. அவர் வந்தவுடன் நான் அவரை விசாரித்தபோது அவர் என்னிடம் பெயர், விலாசம் சொன்னார். பின்னர் அரியானூர் விஜயன் கொலை வழக்கு சம்மந்தமாக நாங்கள் 5 பேர் சேர்ந்து விஜயனை கொலை செய்ததாகவும், கிருபாகரனும், சுந்தரமூர்த்தியும் நீதிமன்றத்தில் ஆஜராகிவிட்டதாகவும், நான் உங்களிடம் ஆஜராகிறேன் என்றும், என்னை போலிசாரிடம் ஒப்படையுங்கள் என்றும் சொன்னார்.

அவர் சொன்னதை நான் முதலில் எழுதவில்லை. விவரமாக சொல்லுங்கள் என்று கேட்டேன். அப்போது காலை 9.05 மணி இருக்கும். அவர் கொடுத்த வாக்குமூலத்தை நான் 10 நிமிடத்தில் எழுதிவிட்டேன். சாட்சி மாற்றி 20 நிமிடங்கள்

ஆகியிருக்கலாம் என்றும், நேரத்தை தான் சரியாக பார்க்கவில்லை என்றும் சொல்லுகிறார். அவரது கல்வி விவரங்களை நான் பதிவு செய்யவில்லை. 14.11.2014 அன்று மாலை நேரத்தில் ஆட்டையாம்பட்டி போலிசார் என்னை பார்த்தார்கள் என்றால் சரியல்ல. நான் அருண்குமாருடன் காவல்நிலையத்திற்கு சென்ற போது காலை 10.00 மணி இருக்கும். நான் காவல்நிலையத்தில் வைத்து தான் எனது மனுவை எழுதினேன்.

நான் காவல்நிலையம் சென்ற போது ஆட்டையாம்பட்டி VAO இருந்தார் என்றால் சரியல்ல. நான் அவரை பார்க்கவில்லை. பொதுஜனங்கள் இருந்தார்கள். நான் எழுதிய அறிக்கை உள்ள பேப்பரை நான் வெளியே கடையில் வாங்கினேன். காவல்நிலையத்தின் அருகே உள்ள கடையில் வாங்கினேன். எதிரி அருண்குமர் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலம் எழுதப்பட்டுள்ள தாளும், நான் எழுதிய அறிக்கை அடங்கிய தாளும் ஒரே நீள, அகலம் கொண்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் தேதி குறிப்பிடப்படவில்லை என்றாலும் VAO சீல் போடப்படவில்லை என்றாலும் சரிதான்.

மேற்படி இரண்டு ஆவணங்களும் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து போலிசாரால் சொல்லசொல்ல என்னால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் சுமார் 1 மணி நேரம் இருந்தேன். காவல்நிலையத்தில் வைத்து போலிசார் அருண்குமாரை விசாரித்தார்கள். அவர் சொன்னதை டைப் செய்து கொண்டார்கள். அப்படி டைப் செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை. காவல்நிலையத்தில் வைத்தே ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

அப்படி என்னை விசாரித்து டைப் செய்து கொண்டார்கள். அப்படி டைப் செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை. அதனை ஒரு உதவிஆய்வாளர் டைப் செய்தார். அவரது பெயர் எனக்கு தெரியவில்லை. எதிரி அருண்குமார் தான் கொடுத்த வாக்குமூலத்தில என் மனைவி, மகன் , தாயாருடன் குடியிருப்பதாகவும், 5 ரோட்டில் பிளக்ஸ்போர்ட் தயார் செய்யும் கடையில் வேலை செய்வதாகவும், எதிரி சொன்னதாக நான் போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரிகள் கிருபாகரன், மேகநாதன், சந்தோஷ்குமார் ஆகியோர் தனது நண்பர்கள் என்றும், அனைவரும் சேர்ந்து மது அருந்துவோம் என்றும், ஜாலியாக இருப்போம் என்றும், எதிரி அருண்குமார் என்னிடம் சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3 மாதம் முன்பு மது அருந்தி ஜாலியாக இருந்த போது ஒரு வேலை செய்து கொடுத்தால் ரூபாய் கொடுப்பதாக கிருபாகரன் சொன்னதாகவும், தங்களுக்கு பணம் தேவைப்பட்டதால் அதனை செய்வதற்கு ஒப்பு கொண்டததாகவும், எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

கிருபாகரன் அரியானூர் அய்யங்கார் பேக்கரில் வைத்து டீ சாப்பிட்டு கொண்டிருந்தபோது சுந்தரமூர்த்தியை தங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் என்றும், விஜயன் தனக்கு மிகவும்தொல்லை கொடுப்பதாகவும், அவனை தீர்த்துகட்டினால் தான் தனக்கு நிம்மதி கிடைக்கும் என்றும் சுந்தரமூர்த்தி சொன்னதாக நான் எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

சுந்தரமூர்த்தி தங்கள் நான்குபேரையும் அழைத்து சென்று விஜயனை அடையாளம் காட்டியதாகவும், பின்பு நாங்கள் நான்குபேரும் திரும்பி விட்டதாகவும், 3 முறை சென்று தாங்கள் விஜயனின் நடமாட்டத்தை கண்காணித்தாகவும், விஜயன் அடிக்ககடி அரியானூர் வந்து சென்றதை தாங்கள் உறுதி படுத்திக்கொண்டதாகவும் எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

01.09.2014 அன்று நான்கு பேரும் டுவீல்லர்களில் சென்று குமார் ஹோட்டலில் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், சுந்தரமூர்த்தி அங்கு வந்தார் என்றும், டிபன் சாப்பிட்டு விட்டு விஜயனை பார்ப்பதற்காக காத்துகொண்டிருந்தோம் என்றும் எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அன்று இரவு 8.00 மணிக்கு விஜயன் அவரது மொபட்டில் அரியானூரை நோக்கி வந்ததாகவும், அவர் திரும்பி வரும் வரை காத்துக்கொண்டிருந்தோம் என்றும்,

இரவு 9.00 மணிக்கு விஜயன் திரும்பி வரும்போது அருண்குமார், சந்தோஷ்குமார் ஆகியோர் விஜயனை குறுக்காட்டி நிறுத்தியதாகவும், நாங்கள் 5 பேரும் சேர்ந்து விஜயனை தென்னந்தோப்பிற்கு இழுத்து சென்றோம் என்றும் எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

1 வது எதிரி என் நிம்மதியே போய்விட்டது என்று சொல்லி விஜயனின் வயிற்றில் கத்தியால் குத்தியதாகவும், நான்குபேரும் விஜயனை அழுத்தி பிடித்துக்கொண்டதாகவும் அந்த சமயத்தில் கிருபாகரன் விஜயனின் கழுத்தை அறுத்துவிட்டதாகவும் விஜயனின் உயிர் போகும் வரை தாங்கள் அங்கு இருந்ததாகவும், 1 ஆம் எதிரி அவரது தோட்டத்திற்கு போய்விட்டார் என்றும், பின்னர் தாங்கள் நால்வரும் டுவீல்லர்களில் வீட்டிற்கு திரும்பி விட்டதாகவும் எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2 நாட்கள் கழித்து 2 ஆம் எதிரி ரூ.10,000/– கொடுத்தார் என்றும், மீதி பணம் தரவில்லை என்றும், எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 11.11.2014 அன்று 2 வது எதிரி ஓமலூர் நீதிமன்றத்தில் சரணடையபோவதாக சந்தோஷ்குமார் சொன்னார் என்றும், நானும் சந்தோஷ்குமாரும் ஓமலூர் சென்று இரண்டாம் எதிரியை பார்த்தோம் என்றும், சுந்தரமூர்த்தி நீதிமன்றத்தில் சரணடையபோவதால் தானும் சரணடைபோவதாக இரண்டாம் எதிரி சொன்னதாக எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரி கிருபாகரன் தங்களிடம் நீங்கள் போலிசில் மாட்டிக்கொள்ளாமல் ஜாக்கிரதையாக இருங்கள் என்று எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞருக்கு கட்டணம் செலுத்த வசதி இல்லாத காரணத்தினால் தான் என்னிடம் சரணடைவதாக எதிரி அருண்குமார்சொன்னதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எந்த சங்கதியும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி அருண்குமார் என்னிடம் சரணடைந்ததாகவும், அவர் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதனை நான் பதிவு செய்து அந்த வாக்குமூலத்தையும், எதிரியையும் காவல்நிலையத்தில் ஒப்படைத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி அருண்குமார் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலமானது என்னால் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து போலிசார் சொன்னபடி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஒரு அரசு அலுவலர் என்பதால் போலிசார் சொல்லிக்கொடுத்தப்படி பொய்யான ஆவணங்களில் கையொப்பம் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

எதிரி அருண்குமார் குடியிருப்பதாக நான் சொல்லும் விலாசமானது பொய்யானது என்றாலும், அந்த விலாசத்தில் அவர் குடியில்லை என்றாலும் சரியல்ல.

<u>1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

28.11.2014 அன்று காலை 10 மணிக்கு நான் எதிரி சுந்தரமூர்த்தியை பார்த்தேன். அதற்கு முன்பாக நான் அவரை பார்த்தது கிடையாது. அரியானூர் பேக்காட்டு வளைவில் உள்ள சுந்தரமூர்த்தியின் வீட்டின் அருகே வைத்து நான் அவரை பார்த்தேன். ஆய்வாளர் என்னை சம்பவ இடத்திற்கு வரச்சொன்னார். சம்பவ இடத்திற்கும் சுந்தரமூர்த்தி வீட்டிற்கும் இடையே சுமார் 500 மீட்டர் தொலைவு இருக்கும்.

சுந்தரமூர்த்தி வீட்டில் காலை 10.15 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இருந்தோம். என்னுடன் ஆட்டையாம்பட்டி VAO கண்ணன் என்பவரும் இருந்தார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட சட்டை இளம்பச்சை வண்ண நிறமுடையதாகும். எரவானம் என்று நான் சொல்லும் பகுதியில் சிமெண்ட் அட்டையால் கூரை வேயப்பட்டு இருந்தது. அது எந்த பக்கத்து எரவானம் என்றால் வடக்குபக்கம் என்று நினைக்கிறேன். எரவானத்தின் குறிப்பாக எந்த இடத்தில் இருந்து கத்தியும், சட்டையும் கைப்பற்றப்பட்டது என்றால் எரவானத்தில் அதனை

தாங்குவதற்காக மரக்கட்டை அமைப்பு இருந்தது. அந்த மரக்கட்டைக்கும் சிமெணட் அட்டைக்கும் நடுவில் அந்த பொருட்கள் சொறுகி வைக்கப்பட்டிருந்தது. நான் பேக்காட்டிற்கு சென்றபோது அங்கு போலிசாருடன் VAO கண்ணன் இருந்தார். வீட்டின் கிழக்கு பக்கம் வாகனம் நிறுத்தும் ஷெட் இருந்தது. செல்போன்களை எடுத்து கொடுத்த வீடானது வடக்கு பார்த்த வாசல் கொண்டது என்று நினைக்கிறேன்.

3 மகஜர்களையும் ஆய்வாளர் சொல்ல சொல்ல பக்கத்தில் இருந்த உதவி ஆய்வாளர் எழுதினார். உதவிஆய்வாளரின் பெயர் தெரியாது. 3 மகஜர்களிலும் நான் சீல் வைத்து கையொப்பம் செய்திருக்கிறேன். என்னுடன் இருந்த VAO கண்ணனும் 3 மகஜர்களிலும் அவரது சீல் வைத்து கையொப்பம் செய்திருக்கிறார். அன்றைய தினம் நான் சொன்னது போல் சுந்தரமூர்த்தி வீட்டிற்கு போகவில்லை என்றும், அங்கு வைத்து எந்த சொத்துக்களும் எங்கள் முன்பாக கைப்பற்றபடவில்லை என்றாலும், அந்த ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து ஆய்வாளரால் முன்கூட்டியே தயார் செய்து வைக்கப்பட்டிருந்தது என்றாலும், அந்த ஆவணங்களில் நாங்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து சீல் வைத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி அருண்குமார் என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தில் எதிரி ஆனந்தன் என்பவர் வழக்கு சம்பவத்தில் சம்மந்தப்பட்டதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- **G. Sri Rama Jeyam,**

III Additional District Judge,
Salem.